**சுருக்கம்**

பள்ளிக்கல்வி - பொது நூலகங்கள் – 2021-2022-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு – "அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு நூல்கள் வாங்குதல்" - அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு அச்சு நூல்கள், மின் நூல்கள், இணைய வழி மின் - பருவ இதழ்கள் மற்றும் மின் ஆராய்ச்சி இதழ்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வித் (பொ.நூ.2) துறை**

**அரசாணை (4டி) எண். 7** **நாள் 30.12.2021.**
**திருவள்ளுவராண்டு 2052,**
**பிலவ வருடம், மார்கழி 15.**

**படிக்கப்பட்டவை :-**

1. அரசாணை (1டி) எண்.616, பள்ளிக்கல்வித் (பொ.நூ1) துறை, நாள் 23.10.2017.
2. பொது நூலக இயக்குநரின் கடித ந.க. எண்.5802/எ1/2021, நாள் 09.09.2021 மற்றும் 28.09.2021.
3. பள்ளிக்கல்வித் துறை மானியக் கோரிக்கை எண்.43-இல் 2021-2022-இல் மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள் 26.08.2021.

-------

**ஆணை:-**

2021-2022-ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்:-

"அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு நூல்கள் வாங்குதல்"

"அண்ணா நூற்றாண்டு நூலகம் 5 இலட்சம் நூல்களுடன் 2010ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்நூலகத்தில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் பதிப்பிக்கப்பட்ட சிறந்த நூல்கள் இடம் பெற்றுள்ளன. இந்நூலகத்தை தினந்தோறும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். மாறிவரும் தொழில் நுட்பங்களுக்கு ஏற்ப வாசகர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், அனைத்துத் துறைகளிலும் வெளிவந்துள்ள தலைசிறந்த புத்தகங்கள் கொள்முதல் செய்து வழங்கப்படும். மின்-புத்தகங்கள், மின்-பருவ இதழ்கள், மின் - ஆராய்ச்சி இதழ்களை வாசகர்கள் எளிதாகப் பயன்படுத்தும் வகையில் இணைய வழி குறிப்புதவிப் பிரிவும் ரூ.6.5 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்."

//த.பி.பா.//

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, பொது நூலக இயக்குநர் தனது கடிதத்தில், கீழ்க்காணும் விவரங்களை தெரிவித்துள்ளார்:

(i) அண்ணா நூற்றாண்டு நூலகம் 5 இலட்சம் நூல்களுடன் 2010 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இந்நூலகம் குறிப்புதவி நூலகமாக செயல்படுகிறது. இந்நூலகத்தில் பல்கலைக்கழக நூலகங்கள் மற்றும் கல்லூரி நூலகங்களில் உள்ள நூல்களுக்கு இணையாக அனைத்து பாடங்களிலும் பிற பொது நூலகங்களில் இடம்பெறாத தேசிய மற்றும் சர்வதேச அளவில் பதிப்பிக்கப்பட்ட சிறந்த தரமான நூல்கள் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் இடம் பெற்றுள்ளன. மேலும், முதன் முறையாக மின்னூல்களும் வாங்கப்பட்டு வாசகர்களின் பயன்பாட்டில் உள்ளது.

(ii) தெற்காசியாவிலேயே பெரிய நூலகமாக செயல்படும் அண்ணா நூற்றாண்டு நூலகத்தை குழந்தைகளின் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் வகையிலும், மாணவர்கள், வேலை தேடும் இளைஞர்கள், TNPSC, UPSC, TRB, SLET, NET, வங்கி தேர்வுகள், மருத்துவம், பொறியியல் சார்ந்த மேற்படிப்பிற்கான தேர்வுகள், மற்றும் பிற போட்டித் தேர்விற்குத் தயாராகும் இளைஞர்கள், உயர் படிப்பிற்குத் தயாராகும் மாணவர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், எழுத்தாளர்கள், அறிஞர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், பெண்கள், மூத்தகுடிமக்கள் என அனைவரும் பயன்படுத்தி வருகின்றனர்.

(iii) அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு வாங்கப்படும் அச்சு நூல்கள் (Print Book), மின் நூல்கள் (E - Books), இணைய வழி பருவ இதழ்கள் மற்றும் ஆராய்ச்சி இதழ்கள் ஆகியவை மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கென அமைக்கப்பட்ட நூல் தேர்வு குழு மூலம் தேர்வு செய்யப்படும்.

(iv) தேர்வு குழுவால் தேர்வு செய்யப்படும் அனைத்து அச்சு நூல்கள், மின்நூல்கள், மின் பருவ இதழ்கள் மற்றும் மின் ஆராய்ச்சி இதழ்கள் ஆகியவற்றை நூல் வெளியீட்டாளர்கள், விற்பனையாளர்களிடம் நேரடியாக பேசி அதிக தள்ளுபடி விலையில் கொள்முதல் செய்வதற்கு Catalogue - களை பரிசீலித்து நூல் விலையை Negotiation செய்ய பொது நூலக இயக்குநர் தலைமையில் கீழ்க்காணும் 4 உறுப்பினர்களை கொண்டு நூல்கள் கொள்முதல் விலை முடிவு செய்தல் குழு (Book Procurement Negotiation Committee) அமைக்குமாறு பொது நூலக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**<u>நூல்கள் கொள்முதல் விலை முடிவு செய்தல் குழு விவரம்</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | பொது நூலக இயக்குநர் | - | தலைவர் |
| 2. | அரசு துணைச் செயலாளர்(வரவு-செலவு), பள்ளிக் கல்வித் துறை | - | உறுப்பினர் |
| 3. | நிதி கட்டுப்பாட்டு அலுவலர், பள்ளிக்கல்வி ஆணையரகம் | - | உறுப்பினர் |
| 4. | நிதி மற்றும் கணக்கு அலுவலர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் | - | உறுப்பினர் |
| 5. | நூலகர் மற்றும் தகவல் அலுவலர், அண்ணா நூற்றாண்டு நூலகம் (நூல் தேர்வுக்குழு உறுப்பினர்கள்) | - | 2 நபர்கள் |

(v) "அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு நூல்கள் வாங்குதல்" என்ற பள்ளிக்கல்வித் துறை மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு அச்சு நூல்கள், மின் நூல்கள், இணைய வழி மின் பருவ இதழ்கள் மற்றும் மின் ஆராய்ச்சி இதழ்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்து அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் உறுப்பினர்கள் நூலகத்தில் மட்டும் அல்லாமல் அவர்களது வீடு, இருப்பிடம் மற்றும் எவ்விடத்திலிருந்தும் பயன்படுத்தும் (Off Campus Access) வசதி ஏற்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்டவாறு ரூ.6,50,00,000/-ஐ (ரூபாய் ஆறு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) அரசு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யுமாறு பொது நூலக இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்:-

| வ. எண். | தலைப்பு | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | நூல்கள் | 5,03,51,000 |
| 2. | மின் நூல்கள் | 1,00,00,000 |
| 3. | இணைய வழி பருவ இதழ்கள் மற்றும் ஆராய்ச்சி இதழ்கள் | 40,00,000 |
| 4. | Off Campus Access Software and Tools | 6,49,000 |
| மொத்தம் | | 6,50,00,000 |

3. அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு நூல்கள், வெளியீடுகள், மின் (E-Format) மற்றும் அச்சு (Print) வடிவில் நூல்கள், பருவ இதழ்கள், ஆராய்ச்சி இதழ்கள், குறுந்தகடுகள் (CD) மற்றும் இணைய தகவல் தொகுப்புகள் (Online Data Base) போன்றவைகள் வாங்குவதற்கு கீழ்க்கண்டவாறு 32 பேர் கொண்ட தேர்வுக்குழு மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, அமைக்கப்பட்டு தற்போது செயல்பட்டு வருகிறது. மேற்காண் அரசாணையில் அமைக்கப்பட்ட கீழ்க்கண்ட குழு மூலம் அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு தற்போதும் நூல்கள் தேர்வு (Books identification) செய்ய பொது நூலக இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

(i) **நூல்கள் தேர்வுக் குழு:-**

| வ. எண் | குழு விவரம் | பதவி |
|---|---|---|
| 1. | பொது நூலக இயக்குநர் (பதவி வழி) | தலைவர் |
| 2. | முதன்மை நூலகர் மற்றும் தகவல் அலுவலர் (பதவி வழி) அண்ணா நூற்றாண்டு நூலகம் | உறுப்பினர் - செயலர் |
| 3. | துணை நூலகர் மற்றும் தகவல் அலுவலர் (பதவி வழி) - 1 நபர், அண்ணா நூற்றாண்டு நூலகம் | உறுப்பினர் |
| 4. | நூலகர் மற்றும் தகவல் அலுவலர் (பதவி வழி) - 2 நபர்கள், அண்ணா நூற்றாண்டு நூலகம் | உறுப்பினர் |
| 5. | நூலகர்(பதவி வழி), கன்னிமாரா பொது நூலகம், சென்னை | உறுப்பினர் |
| 6. | அண்ணா பல்கலைக்கழகம், சென்னை<br>பொறியியல் - 5 நபர்கள் (i) Electrical, Electronics<br>(ii) Civil, Architecture<br>(iii) Mechanical, Aeronautical Engineering,<br>(iv) Computer Science,<br>(v) Chemical, Leather Technology | உறுப்பினர் |
| 7. | டாக்டர் அம்பேத்கார் சட்ட பல்கலைக்கழகம், சென்னை<br>சட்டம் - 1 நபர் | உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 8. | டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழகம், சென்னை<br>**மருத்துவம் - 1 நபர்** | உறுப்பினர் |
| 9. | சென்னை பல்கலைக்கழகம், சென்னை - 16 நபர்கள்<br>**மொழியியல்**<br>ஆங்கிலம் - 1, தமிழ் - 1<br>**அறிவியல்**<br>இயற்பியல் - 1, வேதியியல் - 1, தாவரவியல் - 1, விலங்கியல் - 1<br>**சமூக அறிவியல்**<br>வரலாறு - 1, பொருளியல் - 1, புவியியல் -1, அரசியல் அறிவியல் - 1,<br>சமூக அறிவியல் - 1, பொது நிர்வாகம் - 1, மானுடவியல் - 1<br>**கணிதவியல்**<br>**வணிகவியல்**<br>**கலைகள் மற்றும் நுண்கலைகள்** | உறுப்பினர் |
| 10. | வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர்<br>**விவசாயம்-1 நபர்** | உறுப்பினர் |
| 11. | **நூலகர் - 2 நபர்கள்**<br>(i) அண்ணா பல்கலைக்கழகம்<br>(ii) சென்னை பல்கலைக்கழகம் | உறுப்பினர் |
| 12. | **உடற்கல்வி மற்றும் கல்வியல் -2 நபர்கள்**<br>(i) தமிழ்நாடு ஆசிரியர் கல்வியல் பல்கலைக்கழகம்<br>(ii) தமிழ்நாடு உடற்கல்வியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம் | உறுப்பினர் |

(ii) அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு நூல்கள் கொள்முதல் செய்வதற்கு Catalogue-களை பரிசீலித்து நூல் விலையை Negotiation செய்ய பொது நூலக இயக்குநர் தலைமையில் கீழ்க்காணும் உறுப்பினர்களை கொண்டு நூல்கள் கொள்முதல் விலை முடிவு செய்தல் குழு (Book Procurement Negotiation Committee) அமைத்தும் அரசு ஆணையிடுகிறது.

**<u>நூல்கள் கொள்முதல் விலை முடிவு செய்தல் குழு விவரம்</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | பொது நூலக இயக்குநர் | - | தலைவர் |
| 2. | அரசு துணைச் செயலாளர் (வரவு-செலவு), பள்ளிக்கல்வித் துறை | - | உறுப்பினர் |
| 3. | நிதி கட்டுப்பாட்டு அலுவலர், பள்ளிக்கல்வி ஆணையரகம் | - | உறுப்பினர் |
| 4. | நிதி மற்றும் கணக்கு அலுவலர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் | - | உறுப்பினர் |
| 5. | நூலகர் மற்றும் தகவல் அலுவலர், அண்ணா நூற்றாண்டு நூலகம் (நூல் தேர்வுக்குழு உறுப்பினர்கள்) | - | 2 நபர்கள் |

4. பொது நூலக இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, 2021 – 2022-ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட "அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு நூல்கள் வாங்குதல்" என்ற அறிவிப்பினை செயல்படுத்திடும் பொருட்டு, இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள நூல்கள் கொள்முதலுக்கான

நடைமுறைகளை பின்பற்றி, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் அமைக்கப்பட்ட மேலே பத்தி 3(i)-ல் குறிப்பிடப்பட்டுள்ள நூல் தேர்வுக் குழுவின் (Books identification Committee) மூலம் நூல்களை தேர்வு செய்து, அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு அச்சு நூல்கள், மின் நூல்கள், இணைய வழி மின் பருவ இதழ்கள் மற்றும் மின் ஆராய்ச்சி இதழ்கள் ஆகியவற்றை மேலே பத்தி 3(ii)-இல் குறிப்பிட்டுள்ள நூல்கள் கொள்முதல் விலை முடிவு செய்தல் குழுவின் (Book Procurement Negotiation Committee) மூலம் கொள்முதல் செய்யவும், அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் உறுப்பினர்கள் நூலகத்தில் மட்டும் அல்லாமல் அவர்களது வீடு, இருப்பிடம் மற்றும் எவ்விடத்திலிருந்தும் பயன்படுத்தும் (Off Campus Access) வசதி ஏற்படுத்திட ஏதுவாக இணைய வழி குறிப்புதவிப்பிரிவு ஏற்படுத்திடவும் பொது நூலக இயக்குநரகத்திற்கு ரூ.6,50,00,000/-க்கு (ரூபாய் ஆறு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) நிர்வாக அனுமதியும், இக்கொள்முதலை 3 ஆண்டுகளில் படிப்படியாக மேற்கொள்ள ஏதுவாக கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது. மேலும், 4-ஆம் ஆண்டு முதல் புத்தகங்களை கொள்முதல் (மின் புத்தகங்கள் மற்றும் பத்திரிக்கைகள் உட்பட) செய்ய தனியாக நிதியொதுக்கீடு செய்ய ஏதுவாக உரிய செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்புமாறு பொது நூலக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்:-

| வ. எண். | தலைப்பு | 2021-2022 | 2022-2023 | 2023-2024 |
|---|---|---|---|---|
| 1. | நூல்கள் | 1,00,00,000 | 2,03,51,000 | 2,00,00,000 |
| 2. | மின் நூல்கள் | -- | 50,00,000 | 50,00,000 |
| 3. | இணைய வழி பருவ இதழ்கள் மற்றும் ஆராய்ச்சி இதழ்கள் | 13,51,000 | 16,49,000 | 10,00,000 |
| 4. | Off Campus Access Software and Tools | 6,49,000 | -- | -- |
| | **மொத்தம்** | **1,20,00,000** | **2,70,00,000** | **2,60,00,000** |

5. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

(i) <u>நூல்கள்:-</u>

2205 00 கலையும் பண்பாடும் - 105 பொது நூலகங்கள் - மாநிலச் செலவினங்கள் - AY அண்ணா நூற்றாண்டு நூலகம் - 368 புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள், சிலேட்டுகள் முதலியவற்றிற்காகும் செலவு -01 புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், சிலேட்டுகள் முதலியவற்றிற்காகும் செலவு.
(த.தொகு. 2205 00 - 105 - AY - 36801 - ரூ.100.00 இலட்சம்)

(ii) <u>மின் நூல்கள், (iii) இணைய வழி பருவ இதழ்கள் மற்றும் ஆராய்ச்சி இதழ்கள், (iv) Off Campus Access Software and Tools:-</u>

2205 00 கலையும் பண்பாடும் - 105 பொது நூலகங்கள் - மாநிலச் செலவினங்கள் - AY அண்ணா நூற்றாண்டு நூலகம் - 376 - கணினியும் துணைப் பாகங்களும் - 01 வாங்குதல்
(த.தொகு. 2205 00 - 105 -AY- 376 01- ரூ.20.00 இலட்சம்)

6. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புது துணைப்பணி" (NEW INSTRUMENT OF SERVICE) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு செலவு பொது-1)த் துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறும் வகையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963-ல் உள்ள அட்டவணை A படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதி (வரவு செலவு பொது 1)த் துறைக்கு நேரடியாக அனுப்பிவைக்குமாறு பொது நூலக இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2021-22-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகள் / திருத்தமதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி(வரவு செலவு பொது 1/கல்வி-II)த் துறைக்கு அனுப்பிவைக்குமாறு பொது நூலக இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.57415/கல்வி-II/2021, நாள் 27.12.2021-இல் பெற்றப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1276 (ஆயிரத்து இருநூற்று எழுபத்தாறு).

(ஆளுநரின் ஆணைப்படி)

தா. கார்த்திகேயன்,
அரசு முதன்மைச் செயலாளர்(மு.கூ.பொ.)

பெறுநர்
பொது நூலக இயக்குநர் (மு.கூ.பொ), சென்னை - 2.
மாநில கணக்காயர், சென்னை – 18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை.

**நகல்:-**
அரசு முதன்மைச் செயலாளர், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, சென்னை-9.
நிதி (கல்வி-II/வரவு செலவு பொ-I/II/வ.வ.I)த் துறை, சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை - 9.
மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 9.
பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர்
அவர்களின் தனிச் செயலர், சென்னை-9.
பள்ளிக்கல்வித் (வரவு செலவு)துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அ. மாலதி 30/12/21
பிரிவு அலுவலர்.

## இணைப்பு

**(அரசாணை(4டி) எண்.7, பள்ளிக்கல்வித்(பொநூ2) துறை, நாள் 30 .12.2021)**

**அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு நூல்கள், மின் நூல்கள், மின் பருவ இதழ்கள் கொள்முதல் செய்கையில் கடைபிடிக்கப்படும் நடைமுறைகள்:-**

### Fiction and Non-Fiction

- அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு நூல் கொள்முதல் செய்கையில் முதலில் வாசகர்கள் பரிந்துரை செய்யும் நூல்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.
- Fiction and Non-Fiction-ல் தேசிய மற்றும் சர்வதேச அளவில் பதிக்கப்படும் நூல்களில் சிறந்த நூல்களின் பட்டியலை Good Reads, Bookish, Amazon, Overdrive, பனுவல், உடுமலை, நம்ம புக்ஸ், போன்ற இணைய தளங்களிலிருந்து தேர்வு செய்யப்பட்டு அவற்றில் சிறந்த நூல்களை நூல் தேர்வு பட்டியலில் சேர்க்கப்பட்டு கொள்முதல் செய்வதற்காக பரிசீலனை செய்யப்பட வேண்டும்.
- Arts and Humanities, Law, Social Science, Medicine, Science and Technology மற்றும் பிற துறை சார்ந்த நூல்களின் பட்டியலை தேர்வு செய்வதற்கு, Jawaharlal Nehru University, Delhi University, National Law University, Bangalore, All India Medical Science Institute போன்ற தேசிய அளவில் சிறந்த கல்வி நிறுவனங்கள் மற்றும் அந்தந்த துறையில் சிறந்த கல்வி நிறுவனங்களின் நூற்பட்டியல்களிலிருந்து நடப்பாண்டிற்கான நூல்கள் தேர்வு செய்யப்பட்டு, அவற்றில் சிறந்த நூல்களை நூல் தேர்வு பட்டியலில் சேர்க்கப்பட்டு கொள்முதல் செய்வதற்காக பரிசீலனை செய்யப்பட வேண்டும்.
- தேசிய மற்றும் சர்வதேச அளவில் தமிழ், ஆங்கிலம், மற்றும் பல்வேறு பாடம் சார்ந்த நூல்களை வெளியிடும் பதிப்பாளர்கள், புத்தக வெளியீட்டாளர்கள் மற்றும் விற்பனையாளர்களிடமிருந்து நடப்பாண்டிற்கான நூல் பட்டியல் பெறப்பட்டு அதிலிருந்து சிறந்த நூல்கள் தேர்வு செய்யப்பட்டு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.
- சிறந்த எழுத்தாளர்கள், படைப்பாளிகளின் தற்போதைய வெளியீடுகளில் பட்டியல் தயாரிக்கப்பட்டு அந்நூல்கள், நூல் கொள்முதல் செய்வதற்காக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.
- அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு நூல் கொள்முதல் செய்வதற்காக தயாரிக்கப்படும் நூல்கள் பட்டியல் நூலகத்தில் நூற்பட்டியுடன் ஒப்பிட்டு பார்க்கப்படும் (Duplicate Checking). நூற்பட்டியில் சரிபார்க்கையில் ஏற்கனவே அந்த நூல், நூலகத்தில் இருப்பது கண்டறியப்பட்டால் அந்நூலினை வாங்குவது தவிர்க்கப்படும். வாசகர்களால் அதிகம் பயன்படுத்தப்படும் நூல் எனில் மட்டும் கூடுதல் படி வாங்கப்பட வேண்டும்.
- அரசாணை (1டி) எண்.616 பள்ளிக்கல்வித் (பொ.நூ.1) துறை, நாள் 23.10.2017 மூலம் அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கென தனியாக நூல் தேர்வுக்குழு, துறை சார்ந்த வல்லுநர்கள், பேராசிரியர்கள், நூலகர்கள் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. நூல் தேர்வுக்குழுவின் உறுப்பினர்கள் பரிந்துரைக்கும் நூல்களில் வாசகர்களுக்கு பயன்படும் சிறந்த நூல்கள் வாங்கப்பட வேண்டும்.

- அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு நூல் கொள்முதல் செய்கையில் பொது நூலக இயக்குநர், நிதித்துறை சார்ந்த உயரதிகாரிகள் மற்றும் நூலகர்கள் உள்ளடக்கிய நூல் விலை குறைப்பிற்கான பேச்சுவார்த்தை குழு அமைக்கப்பட்டு, பதிப்பாளர்கள், நூல் விற்பனையாளர்களிடம் பேசி, நூல் கொள்முதல் விலையில் அதிகமான தள்ளுபடி பெறப்பட வேண்டும்.
- நடப்பாண்டில் அதிக மக்களால் விரும்பப்படும் மற்றும் அதிகமாக விற்பனையாகும் நூல்களின் பட்டியல் பெறப்பட்டு அவற்றில் தரமான சிறந்த நூல்கள் வாங்கப்பட வேண்டும்.

**Fiction**

- சாகித்ய அகாடமி விருது, ஞானபீட விருது, யுவ புரஷ்கார், பால சாகித்ய அகாடமி விருது போன்ற விருதுகள் பெற்ற நூல்களும், விருது பெற பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நூல்களும், மேலும் மாநில அரசின் விருது பட்டியலில் இடம் பெற்ற நூல்களும், நூல் கொள்முதல் செய்வதற்காக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.
- Pulitzor Prize, Man Booker Prize போன்ற சர்வதேச அளவில் சிறந்த நூல்களுக்கு வழங்கப்படும் விருது பெற்ற நூல்களும், அவ்விருதிற்காக பரிந்துரைக்கப்பட்ட நூல்களின் பட்டியல் பெறப்பட்டு, நூல் கொள்முதல் செய்வதற்காக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**E - Books and E - Journals**

- அச்சு நூல்களைப் போலவே, வாசகர்கள் விரும்பும் மின்நூல்களும் முன்னனி புத்தக வெளியீட்டாளர்களிடமிருந்து மின் நூல்களின் நூற்பட்டி பெறப்பட்டு அதிலிருந்து சிறந்த நூல்கள் தேர்வு செய்யப்பட்டு Perpetual Access முறையில் வாங்கப்பட வேண்டும்.
- மாணவர்கள், ஆராய்ச்சியாளர்களுக்கு அவர்களது மேற்படிப்பிற்கும் ஆராய்ச்சிக்கும் மிகவும் பயன்படும் சிறந்த மின் பருவ இதழ்கள், மின் ஆராய்ச்சி இதழ்கள் பட்டியல், IIT, IIM, IISc, Anna University போன்ற தேசிய மற்றும் மாநில அளவிலான முக்கிய கல்வி நிறுவனங்களின் நூற்பட்டியல்கள், பருவ இதழ்களின் பட்டியல்களிலிருந்து தயாரிக்கப்பட்டு, நூல் கொள்முதல் செய்வதற்காக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.
- இணைய வழி மின் பருவ இதழ்கள், மின் ஆராய்ச்சி இதழ்கள் ஆகியவை பதிப்பாளர்களின் அங்கீகாரம் பெற்ற ஒருங்கிணைந்த விற்பனையாளர் (Aggregator) மூலம் வாங்கப்பட வேண்டும்.
- அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்காக வாங்கப்படும் மின் நூல்கள் மற்றும் மின் பருவ இதழ்களை, நூலக உறுப்பினர்கள் எங்கிருந்தும் பயன்படுத்தும் வகையில் Off Campus Access வசதி ஏற்படுத்தப்பட வேண்டும்.

தா. கார்த்திகேயன்,
அரசு முதன்மைச் செயலாளர்(மு.கூ.பொ.)

////ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.